1992 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

(அ) நெல்லை கட்டபொம்மன் ஆலங்குளத்தில் புதிய விவசாயக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

(ஆ) எனவே அது தொடர்பான மற்றொரு கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கு மேற்குபக்கமாக உள்ள ஆலங்குளம், தென்காசி அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி மற்றும் வாசுதேவ நல்லூர், அந்தப் பகுதிகளைச் சுற்றி எந்த அரசு கல்லூரியுமே கிடையாது. அதுவும் விவசாயத்தை நம்பி வாழ்கின்ற அந்தப் பகுதியிலே ஒரு விவசாயக் கல்லூரியை அமைத்தால் மிகப் பொருத்தமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் அங்கு விவசாயக் கல்லூரி அமைக்கப்படும்பொழுது விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட இருப்பதினால் அந்த விவசாயக் கல்லூரியை அங்கே ஏற்படுத்த அரசு மறுபரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் கிள்ளிகுளம் என்ற ஊரில் ஒரு வேளாண்மைக் கல்லூரி செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறது. கிள்ளிகுளத்திற்கும், ஆலங்குளத்திற்குமிடையே 35 கிலோ மீட்டர் தான் இடைவெளி இருக்கிறது. கோவில்பட்டியில் புஞ்சை தானியங்கள் ஆராய்ச்சிக்காக ஒரு வேளாண் பயிற்சி மையமும், அம்பாசமுத்திரம் நஞ்சைப் பயிர் ஆராய்ச்சி மையமும் செயல்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. எனவே புதிய கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசிடம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 56, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

56—

ஒசூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.

*1301—திரு. கே. ஏ. மனோகரன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வீட்டு வசதித் துறை மூலமாக ஒசூரில் கட்டப்பட்டுள்ள சில வீடுகளின் தொகுதி உயர்நீதிமன்ற தடையாணையால் ஒதுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ? ...

(ஆ) ஆம் எனில், தடையாணையினை நீக்கி விரைவில் வீடுகளை ஒதுக்கித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். தடையாணையை நீக்கி ஒதுக்கப் படாமல் உள்ள எல்.ஐ.ஜி. 300 மற்றும் 211 வீடுகளை, ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேற்சொன்ன தடையாணை எச்.ஐ.ஜி. வீட்டினைக் கட்டுப்படுத்தாததால் அவ்வீடுகள், குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டன என்று இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாரிய வீடுகள் தடையினை நீக்கி, உடனடியாக, கூடிய விரைவிலே ஒதுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை ஆணையை நீக்குவதற்கு காலதாமதம் ஏற்படுகின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிற காரணத்தால் வீட்டினுடைய தரமும், மற்றும் வாரியத்தினுடைய நிதியும் முடக்கப்படுகின்ற சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதுசம்பந்தமாக அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்த ஆணையை திரும்பப் பெற்று அதற்குப் பிறகு விளம்பரத் தின் வாயிலாக குலுக்கல் முறையில் ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜூ.

திரு. கே. பி. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒசூர் பற்றி துணைக் கேள்வி இருக்கவேண்டும்.

திரு. கே. பி. ராஜூ: அதே கேள்விதான் கொஞ்சம் மாறி யிருக்கும். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 57, திரு. மு. தென்னவன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.